<u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| MCOP No. 18/2016 | Date : 24.10.2025 | PW 1 |
|---|---|---|
| Name: மாதன் (எ) சின்னண்ணன் | த/பெ. குப்பன் | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது வயது, வருமானம், தொழில் காண்பிப்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் பைக் ஓட்டி சென்றேன் என்றால் மணி என்பவர் ஓட்டி சென்றார். மணி என்பவருக்கு ஓட்டுநர் உரிமமோ, வண்டிக்கு காப்பீடோ இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்தது 12.01.2007 ந்தேதி என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். 9 வருடங்கள் கழித்து காலதாமதமாக நான் மனு தாக்கல் செய்ததற்கு என்ன காரணம் என்றால் குறிப்பாக காரணம் எதுவுமில்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் நம்பர், விலாசம் தெரியாத டேங்கர் லாரி என்றுதான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடையாளம் தெரியாத லாரியை சாதகமாக பயன்படுத்தி அந்த வாகனமானது 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக பொய்யான தகவல் கூறி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. TN 30 S 302 என்ற டேங்கர் லாரி 2ம் எதிர்மனுதாரரிடம் விபத்தின்போது எந்த காப்பீடும் நிலுவையில் இருந்ததாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தற்போது கூலிவேலை செய்கிறேன். 2007ம் ஆண்டிலேயே நான் பூரண குணமடைந்து நல்ல திடகாத்திரமாக உள்ளேன் என்றும், எனக்கு எந்த உடல் ஊனமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு நான் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் மணி என்பவருடைய அஜாக்ரதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும், அதன் காப்பீட்டாளரையும் தரப்பினராக சேர்க்காததால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்தில்சம்ந்தப்பட்டதாக கூறும் டேங்கர் லாரி TN 30 S 302 என்ற டேங்கர் லாரி 2ம் எதிர்மனுதாரரிடம் விபத்தின்போது காப்பீடு செய்யப்பட்டதாக எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யாததால் 2ம்

**எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மேற்படி லாரிக்கு விபத்தின்போது தகுந்த காப்பீடு இருந்தது என்பதை நிரூபணம் செய்யவேண்டியது என்னுடைய கடமை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள தொகை அதிகம் என்றால் சரியல்ல.**

**ஒம்/—சின்னண்ணன்**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

**ஒம்/—ஆர்.சரவணபாபு,**
சார்பு நீதிபதி,
மேட்டூர்.